மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விநேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு இடம் இருக்கிறதா? திரு. சுப்பு அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள். கேள்விநேரத்திலே பல பிரச்னைகளைப்பற்றி இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்ட கேள்விகளுக்கே பதில் சொல்ல முடியாமல், நூற்றுக்கணக்கான கேள்விகள் அன் ஸ்டார்ட் கேள்விகளாகி, ஸ்டார்ட் இல்லை என்று உமாநாத் அவர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், எனவே நேரம் பாழ் ஆகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது விவாதம் இல்லை.

திரு. க. சுப்பு : விளக்கத்திற்காகக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றிக் கேள்வி நேரத்தில் எடுக்க வேண்டாமென்று அவர்கள் சொன்னார்கள்.

'ரிலேடிங் டு தி கொஸ்டின்' என்று சொல்லி

எழுத்திலே கால் இல்லை என்பதுபோன்ற இதையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் அதற்கு இப்பொழுது நேரம் இல்லை.

4. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருவொற்றியூர் பகுதியில் கடலரிப்பு.

*வினா எண். 1—திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் கடலோரப் பகுதியில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்டும் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1979 பிப்ரவரி 12]

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, நீண்ட வருஷங்களாக இந்தக் கடலரிப்பினால் ஊரில் பெரும்பகுதி அழிந்து விட்டது. இன்னும் ஒரு வருஷத்திற்குள்ளாகப் பல தொழிற்சாலைகள் கடலரிப்பின் காரணமாக மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அரசு உடனடியாக ஏதேனும் தற் காலிகத் திட்டம் தீட்ட இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) பேரவைத் தலைவரவர்களே, மத்திய பாசனம் மற்றும் மின் வாரியத்தின் நிதி உதவியுடன் பூனாவிலுள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆய்வுக் கூடத்தில் நடத்தப்படவுள்ள ஆராய்ச்சிகளின் முடிவுகள் தெரிந்த பின்னரே இப்பகுதியில் கடலரிப்பினைத் தடுக்கும் செயற் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும், கடலரிப்பை நிரந்தரமாகத் தடுப்பது குறித்து ஓர் தகுந்த திட்டத்தை உருவாக்குவதற்காக, பூண்டியில் உள்ள ஹைடிராலிக்ஸ் மற்றும் ஹைடிராலஜி நிலையத்தில் ''மாதிரி ஆய்வுகளை'' நடத்திக் கொண்டு வருகிறது. இவ்வாய்வுகள் முற் றுப் பெறுமுன்னரே, கட்டிடத் தலைமைப் பொறியாளர், ராய புரம், எண்ணூர் பகுதிகளில் கடலரிப்பு சம்பந்தமாக உடனடி நிவாரணப் பணிகளுக்காகத் தற்காலிகப் பாதுகாப்புத் திட்டங் கள் அடங்கிய செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். ரூ. 30·80 இலட்சம் மதிப்புள்ள இத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல்லாண்டு காலத்திற்கு முன்பாகவே காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள் ளப்பட்டது என்பதை அறிவோம். இப்போது புதிய பூம்புகார் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் புதிய பூம்புகாரும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டு வருகிறது என்று பல முறை சட்ட மன்றத்தில் சொல்லியும்கூட இன்னும் அதைத் தடுக்க நடவ டிக்கை எடுத்தபாடில்லை. இப்புதிய பூம்புகாரைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுத்து இந்தப் புதிய பூம்புகாரைக் காப் பாற்ற முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர் களுடைய கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. கட லரிப்புப் பிரச்சினையில் மிகப் பெரிய அளவில் தமிழகத்தின் எல் லையைக் காப்பாற்ற வேண்டிய பெரிய பொறுப்பு இருக்கும் காரணத்தால் மிகப் பெரிய திட்டமாக அதனை ஏற்றுக்கொண்டு தமிழகம் முழுவதிலும் அதைப் பற்றிப் பரிசீலிக்க ஏற்பாடு செய்து இந்த அரசு தன்னால் முடிந்த அளவுக்கு பணி செய்ய முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : இந்தக் கேள்விக்குப் பதிலளித்த பார்லி மெண்டரி செக்ரடரி அவர்கள் கடலரிப்பைத் தடுப்பது பற்றிய பழைய திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்த விளக்கம் கடலரிப்பைத் தடுப்பது பற்றிய புதிய திட்டமாகும். திருவொற்றியூருக்குள்ளேயே கடல் வந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு இந்தக் கடலரிப்பைத் தடுக்க என்ன புதிய திட்டம் வைத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதுபற்றிய திட்டம் முழுமையாக உருவாக்கப்பட்டவுடன் நிச்சயமாக இந்த அவையில் வைக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபகாலத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததற்குப் பிறகு, கடலை நிலமாக்குவோம், அந்த நிலத்தை வீடாக்குவோம் என்ற திட்டத்தோடு வந்திருக்கிறார்கள் என்று பத்திரிகை வாயிலாகப் பார்த்தோம். அப்படி ஏதேனும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா இல்லையா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; முன்பு நான் குறிப்பிட்ட பதிலிலேயே இதற்கும் பதில் அடங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மினி பரிசுச் சீட்டுத் திட்டம்.

* வினா எண். 3—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மினி பரிசுச் சீட்டுகளை நடத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

திரு. எம் வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.